From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 221 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Andichamy | Father/Husband Name | : Periyakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கண்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். மளிகை கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.06.21ம் தேதி மாலை சுமார் 4 முதல் 4.30 மணியளவில் எங்கள் கடையிலிருந்தபோது எதிரி சுரேஷ் என்பவர் கத்தியை எடுத்து வந்தார். அப்போது ஸ்நாக்ஸ் கடைக்கு போடும் வாகனம் வந்தது. அப்போது அந்த வாகனத்தின் வந்த நபர் இவர் கத்தியுடன் வருகிறார் எங்கே வருகிறார் என்று என்னிடம் கூறினார். அப்போது எதிரி சுரேஷ் அசிங்கமான வார்த்தைகள் தேவடியாபுண்டமகனே என்று சொல்லி நீ என்ன பெரிய இவனா என்று சொல்லி கத்தியை வைத்து குத்த வந்தார். அப்போது என் அம்மாவும் மனைவியும் சுரேசை பிடித்துக்கொண்டார்கள். அந்போது சேட் என்பவரும் அங்கு வந்தார். அவரிடம் உங்கள் தம்பி கத்தியுடன் வந்திருக்கிறார் என்று சொன்னபோது அவர் என்னடா ஒம்மால ஓக்க உன்னத்தான்டா குத்த வந்தோம் என்று சொல்லியபோது என் அம்மாவும், மனைவியும் என்னை எங்கள் வீட்டிற்குள் வைத்து அடைத்துவிட்டார்கள். அப்போது எதிரிகள் என் அம்மாவையும், தகாத வார்த்தைகளால் பேசி கத்தியைகொண்டு குத்த விரட்டியும் சேட் என்பவர் செருப்பைக்கொண்டு என் அம்மாவை அடித்துக்கொண்டிருந்தார். அப்போது கடைக்கு வந்த அணைவரையும் கத்தியை காட்டி நீ ஓடு ஓடு என்று மிரட்டினார். அப்போது பழனிமுருகன் என்பவர் என் கடைக்கு பொருட்கள் வாங்க வந்தபோது எதிரிகளிடம் அவர் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார், அதற்கு எதிரிகள் அவரை பார்த்து உன்னையும்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம் வாடா என்று சொல்லி கல்லைகொண்டு அவரது இருச்ககர வாகனத்தை உடைத்துவிட்டார்கள். பின்னர் பழனிமுருகனுக்கும்

சுரேசுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு பழனிமுருகன் கீழே விழுந்தபோது எதிரி சுரேஷ் கல்லைக்கொண்டு அவரது தலையில் அடித்துவிட்டார். இரத்தக்காயத்துடன் அவர் அந்த இடத்திலிருந்து வெளியே வந்தபோது எதிரி சேட் என்பவர் இன்னும் நீ சாகவில்லையா என்று கேட்டு பெரிய கல்லை எடுத்து அவரது தலையில் அடித்து இரத்தக்காயப்படுத்திவிட்டார். பின்னர் என் அம்மாவை சேட் என்பவர் தாக்கியதில் தலையில் காயம் இருந்தது, அவர் கல்லால் அடித்தாரா, தள்ளிவிட்டு காயம் எற்பட்டதா என்று நான் பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் அடித்ததில் கையில் இரண்டு விரல்கள் என் அம்மாவில் ஒடிந்துவிட்டது. பிறகு என் மனைவியை எதிரிகள் செருப்பால் அடித்ததில் ஊமைக்காயங்கள் இருந்தது. பின்னர் எங்கள் ஊர்க்காரர்கள் விலக்கிவிட்டபோது எதிரிகள் ஊர்க்காரர்களையும் மிரட்டினார்கள். அதன்பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் மேலூர் அரசு மருத்துவமனையில் என் அம்மாவும், பழனிமுருகனும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தோம். மேற்படி மருத்துவமனைக்கும் எதிரிகள் வந்து உங்களை சங்கை அறுக்காமல் விடமாட்டோம் என்று மிரட்டிச்சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் 4 புகைப்படங்களுடன்கூடிய ஒரு பக்கம் சா.பொ.1, 2 புகைப்படத்துடன்கூடிய ஒரு பக்கம் சா.பொ.2 , பெரிய ஒரு புகைப்படம் கொண்ட ஒரு பக்கம் சா.பொ.3 , கடை பொருட்கள் சிதறிக்கிடக்கும் புகைப்படம் உள்ள பக்கம் சா.பொ.4, எதிரிகள் என் அம்மாவுடன் தகராறு செய்யும் 2 புகைப்படங்கள்கொண்ட பக்கம் சா.பொ.5, பழனிமுருகன் என்பவருக்கு ஏற்பட்ட இரத்தக்காயத்திற்கான 2 புகைப்படங்கள் கொண்ட பக்கம் சா.பொ.6 ஆகும். (மேற்படி சான்று பொருட்களில் தேதி, நேரம் குறிப்பிடாததை எதிரிதரப்பில் ஆட்சேபித்து ஆட்சேபித்து எதிரிகள்தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 221 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Palanimurugan | Father/Husband Name | : Malaiyandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மட்டங்கிபட்டியில் வசித்து வருகிறேன். நான் கேபிள் டி.வி. நடத்தி வருகிறேன், வெள்ளளுர் ஊராட்சிமன்ற துணைத்தலைவராக இருந்துவருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.06.21ம் தேதி மாலை சுமார் 4 முதல் 4.30 மணியளவில் அ.சா.1ன் கடை முன்பாக பொருட்கள் சிதறிக்கிடந்தது. நான் கண்மாயில் வேலை நடந்துகொண்டிருந்ததால் வேலை செய்பவர்களுக்கு கூர்டிரிங்ஸ் மற்றும் பிஸ்கட் வாங்குவதற்காக அ.சா.1-ன் கடைக்கு வந்தபோது ஒரே கூட்டமாக இருந்தது. எதிரி சேட் என்ற கண்ணன் இது என் ஏரியா உனக்கு என்ன இங்கு வேலை என்று சொல்லி இடத்தை காலி பன்னுடா என்று சொல்லி என்னை அடிக்க வந்தபோது நான் விலகிக்கொண்டேன். பின்னர் நான் என் செல்போன்கேமராவிலிருந்து சம்பவத்தை வீடியோ எடுக்க ஆரம்பித்தேன். அப்போது எதிரி சேட் என்பவர் கல்லை எடுத்து எறிந்தார், அது என் இருசக்கர வாகனத்தில் பட்டு சேதமானது. சுரேஷ் என்பவர் கல்லை எடுத்து என்னை எறிந்தார் நான் விலகிக்கொண்டேன். இருவரும் கல்லைக்கொண்டு என்னை அடிக்க வந்தபோது முனியாண்டி என்பவர் சுரேஷ் என்பவரை விலக்கி சென்றுவிட்டார். சுரேஷ் என்பவர் கீழே விழுந்த என்னை கல்லை வைத்து எனது உச்சந்தலையில் அடித்து காயப்படுத்தினார். அப்போது அருகிலிருந்தவர்கள் என்னை அங்கிருந்து விலக்கி வந்தார்கள். இரத்தம் அதிகமாக போனதால் நான் மயக்கமாகிவிட்டேன். என்னை காரில் ஏற்ற கொண்டுவந்தபோது தண்ணீர்கொடுத்து என்னை தெளியவைத்தார்கள், அப்போது சேட் என்ற கண்ணன் என்னை பார்த்து இன்னுமாடா நீ சாகவில்லை என்று சொல்லி தேவடியா மகனே என்று

அசிங்கமாக பேசி பெரிய கல் ஒன்றை எடுத்து என் உச்சந்தலையில் அடித்து இரத்தக்காயப்படுத்தி கீழே போட்டுமிதித்தார். இதையெல்லாம் காவியா என்ற பெண்ணும், அ.சா.1-ன் அக்கா மகளும் செல்போனில் வீடியோ எடுத்தார்கள். எதிரிகள் ஏற்கனவே என்னை தாக்கிய வகையில் 2 வழக்குகளில் புகார் கொடுத்ததற்கான ஆவண நகல்கள் என்னிடம் உள்ளது. (சாட்சி தனக்கு உச்சந்தலையின் வலது மற்றும் இடதுபக்கமுள்ள காயத்தழும்புகளை நீதிமன்றத்தில் காண்பித்தார். இருபுறங்களிலும் தழும்ப காணப்பட்டது.) பின்னர் நான் காரில் காவல் நிலையம் சென்றுவிட்டு போலீசார் அறிவுறுத்தியதன்பேரில் மேலூர் அரசு மருத்துவமயில் உள்நோயாளியாக 8 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவமனியல் எதிரிகள் இருவரும் வழக்கா கொடுத்தீர்கள் கழுத்தை அறுக்காமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 221 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Muniyandi | Father/Husband Name | : Gurusamy |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கண்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.06.21ம் தேதி மாலை சுமார் 4 முதல் 4.30 மணியளவில் அ.சா.1ன் கடை முன்பாக சம்பவம் நடந்தது. நான் வெள்ளளூர் சென்றுகொண்டிருந்தபோது எனது பேத்தி காவியா எனக்கு போன் செய்து சுரேஷ் என்பவர் கத்தியை எடுத்து குத்த வந்ததாகவும், வாங்க ஐயா என்று அழைத்ததன்பேரில் நானும் என் நண்பர் லெட்சுமணன் என்பவரும் சம்பவ இடத்திற்கு வந்தபோது எதிரிகள் அண்ணன்தம்பி 3 பேர், அவருடைய அம்மாவும் இருந்தார்கள். சுரேஷ் என்பவர் கையில் கத்தியுடன் இருந்தார். சேட் என்பவர் கையில் செருப்பை வைத்து எல்லாரையும் அடித்துக்கொண்டிருந்தார். நான் அவர்களை விலக்கிவிட்டுக்கொண்டிருந்தபோது எதிரி சுரேசும், அ.சா.2ம் கீழே விழுந்துவிட்டார்கள். அப்போது சுரேஷ் கல்லை எடுத்து அ.சா.2ன் நடு மண்டையில் அடித்து இரத்தக்காயப்படுத்தினார். பழனிமுருகனை நாங்கள் அழைத்து வரும்போது சேட் என்பவர் கல்லை வைத்து அ.சா.2ன் தலையில் அடித்து தலை நஞ்சிறுச்சு. என் அக்கா பாப்பா என்பவருக்கு கையில் கட்டைவிரல் ஒடிந்துவிட்டது. அவருடைய தலையில் கல்லால் அடித்த காயமிருந்தது. பின்னர் அவர்களை விலக்கிவிட்டு காயம்பட்டவர்களை காவல் நிலையததிற்கு அழைத்துச்சென்றுவிட்டு பின்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.